



# Voice of Jagadguru




advaitam paramanandam

an e-magazine on advaita


ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஜகத்குரு சங்கராச்சாரியார் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மகாசன்னிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்தர் மஹாஸ்வாமிஜி அவர்களின் 74வது வர்த்தந்தி



## ஸ்வர்ண பாரதீ மஹோத்சவம்
### சிறப்பு இதழ் 2

ஸ்ரீ ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு மஹா சமஸ்தானம் ஸ்ரீ சாரதா பீடம் சிருங்கேரி உத்தராதிகாரி சிஷ்ய ஸ்வீகார மஹோத்ஸவ ஆஹ்வான பத்திரிகை முதல் பிரதமபாஷணம் வரை (1974 ஸ்ரீ சிருங்கேரி சிஷ்ய ஸ்வீகார விசேஷ மலரில் இருந்து)

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

### பகுதி-3

## ஸ்ரீ பாரதீ தீர்த்த ஸ்வாமிகள்
## (ஸ்ரீ ஸன்னிதானம் )

ஆந்திரப்பிரதேசத்தில் குண்டூர் ஜில்லாவில் பலநாடு தாலுகாவில் நாகுலேரு எனும் நதிக்கரையில் அலகுமல்லபாடு அக்ரஹாரத்தில், வேத வியுத்பன்னர்களாகவும், ஆசார சீலர்களாகவும் உள்ள ஆந்திர குடும்பம் ஒன்று உள்ளது. அவர்களது குல தெய்வம் திருமலையில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள். அவர்களது கோத்திரம் குத்ஸ கோத்திரம். இந்தக் குடும்பத்தில் ஸ்ரீ வெங்கடேசுவர அவதானி என்பவர் உதித்தார். அன்னாருக்கு ஸ்மார்த்தபாக வித்தியாப்யாசம் திருப்பதியிலும், வேதபாக வித்யாப்யாசம் மசூலிப்பட்டிணத்திலிருந்த வித்வான், பிசுபட்டி (பிசுபாதி) கொண்டா பட்டரிடத்திலும் நடந்தேறியது. இவர் தம் 15வது வயதில் நரசராவ் பேட்டை தாலுகா, மென்னேகல்லு கிராமத்தில் வசித்துவந்த வேதமூர்த்தி கோடி ப்ரம்மையா


ஸ்ரீ ஸீதாராம ஆஞ்ஜநேயரும் அவரின் குடும்பத்தினரும்

சாஸ்திரி என்பவருடைய புத்திரி, சௌ. அனந்தலக்ஷ்மியை மணந்தார்.

ஸ்ரீ வெங்கடேசுவர அவதானிக்கு நான்கு பெண் குழந்தைகள் பிறந்தனர். அவர் தனக்கு ஓர் ஆண் மகவு ஏற்பட வேண்டுமென்று தேவதைகளை பூஜித்தும், பிரார்த்தித்தும் வழிபாடுகள் செய்தும், விரதங்கள் அனுஷ்டித்தும் வேண்டிக் கொண்டார்.ஒரு வருடகாலம், தன் கிராமத்திலுள்ள பவானி சங்கரருடைய ஆலயத்தில் உள்ள சிவபெருமானுக்கு விடாது மஹாந்யாஸ பூர்வகமாக ருத்ராபிஷேகம் செய்தார். அதே ஊரிலுள்ள ஸ்ரீ ஆஞ்ஜநேய ஸ்வாமியின் கோயிலில் சௌ. அனந்தலக்ஷ்மி அம்மாள் ஜபம் செய்தும், தவம் இயற்றியும், பகவானை ஆராதித்தாள்.

ஒருநாள் அனந்தலக்ஷ்மி அம்மாளின் கனவில் ஸ்ரீ ஆஞ்ஜநேயர் தோன்றி, மூன்று கனிகளை அளித்துவிட்டு மறைந்தார். அம்மையார் விழித்துக்கொண்டு, தான் கண்ட இனிய கனவை தன் பர்த்தாவிடம் தெரிவித்தாள். அடுத்து சில நாட்களில் இம்மாது கருவுற்றாள். அவதானிகள் சித்திரை மாதத்தில்வரும்

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

வஸந்த நவராத்திரியில், தன்னுடைய பூஜாக்கிருஹத்திலுள்ள ஸ்ரீ ராமபட்டாபிஷேக படத்தினருகில் சென்று, ஸ்ரீ ராமபிரானிடம், 'பிரபோ ! எனக்கு ஓர் ஆண் மகவை அனுக்கிரஹம் செய். அவனுக்கு சீதாராம ஆஞ்ஜநேயலு என்று திருநாமம் சூட்டுகிறேன்' என்று அல்லும் பகலும் பிரார்த்தித்தார். சௌ. அனந்தலக்ஷ்மி அம்மாளுக்கு ஒன்பது திங்கள் பூர்த்தியாயின. அவதானிகளுடைய பிரார்த்தனை வீண் போகவில்லை என்று சூசிப்பிக்க அநேக சுப சகுனங்கள் ஏற்பட்டன. கடவுளின் அனுக்கிரஹம் சித்திப்பதற்கான அநேக அறிகுறிகள் தென்பட்டன. இவற்றை அவ்வப்போது அவதானிகள் தன் ஸஹதர்மிணிக்குத் தெரிவித்து வந்தார். அனந்தலக்ஷ்மி அம்மாள் 10வது மாதத்தில் ஓர் ஆண் மகவை ஈன்றெடுத்தாள்.



கர ஆண்டு சைத்ர பஞ்சமி, புதவாரம், மிருகசீர்ஷ நக்ஷத்திரம், தனுர் லக்னம், கூடிய சுபயோக சுபதினத்தில், 11-4-51 அன்று குழந்தை சுபஜனனம் ஆயிற்று. அவதானிகளுக்கு புருஷப்பிரஜை ஏற்பட்டது குறித்து கிராமம் முழுவதும் சந்தோஷங்கொண்டது. குழந்தைக்கு 'ஸீதாராம ஆஞ்ஜநேயலு' என்ற நாமகரணம் (ஏற்கெனவே அவதானிகள் பிரார்த்தித்துக்கொண்டபடி) சூட்டப்பட்டது.


ஸ்ரீ ஸீதாராம ஆஞ்ஜநேயலு

ஒருநாள் சௌ, அனந்தலக்ஷ்மி அம்மாள், விடியற்காலை 5 மணிக்கு விழிப்புக் கொண்டாள். தன் பக்கத்தில் துயில்கொண்டிருந்த தன் பாலகனின்பால் அவளுடைய பார்வை சென்றது. என்ன ஆச்சர்யம் ! குழந்தையின் முக மண்டலத்தைச்சுற்றி சூர்ய பிரபையைப்போல் ஓர் ஒளி வட்டத்தைக் கண்டாள். தாய் துணுக்குற்றாள். அடுத்துள்ள சிலரிடம் இந்த சம்பவத்தைப்பற்றிக் கூறினாள் விஷயம் அறிந்த பெரியோர்கள், 'இச்சிறுவனுக்கு மகத்தான வருங்காலம் எதிர் நோக்கி இருக்கிறது என்பதற்கு இது ஒரு சூசனை ஆகும்' என்று அபிப்பிராயம் தெரிவித்தனர். பெற்றோருக்கு ஏற்பட்ட உவகை விவரிக்கத்தரமன்று

குழந்தைக்கு மூன்று ஆண்டுகள் நிறையுமுன்னரே, கிராமத்திலுள்ள மகளிர் இக்குழந்தை இருந்த கிருஹத்திற்கு வந்து, குழந்தையைத் தங்கள் கிருஹத்திற்கு எடுத்துச் சென்றுவிடுவார்கள். குழந்தை தனது கிருஹத்திற்கு வந்துசேர் சாயங்காலமாகிவிடும். அதுவரை அவர்கள் அக்குழந்தையுடன் கொஞ்சிக்குலாவுவார்கள். ஒவ்வொரு நாளும் தாயார் அனந்தலக்ஷ்மி

அம்மாளுக்கு குழந்தையைத் தேடி இரவு வீடு சேர்ப்பதே ஒரு பெருத்த பாடாகிவிட்டது.

ஒருநாள் குழந்தை அழ ஆரம்பித்து, ஓயாமல் அழுதது. எவ்வளவுதான் சமாதானம் செய்தும் அழுகை நின்றபாடில்லை. தாய், குழந்தையை ஸ்ரீ பவானி சங்கரருடைய ஸந்நிதானத்திற்கு எடுத்துச் சென்றாள். கோவிலை அடைந்ததும் குழந்தையின் அழுகை நின்றது. 'சம்போ சிவ சிவ' என்று குழந்தை தன் மழலை மொழியால் திரும்பத்திரும்ப உச்சரித்தது. தாய், குழந்தையுடன் வீடு திரும்பினாள். ஆனால் குழந்தை சம்போ சிவ, சிவ' என்றே சொல்லிக்கொண்டிருந்தது. கிராமத்திலுள்ளவர்கள் 'மூன்றே வயதுள்ள இந்தக் குழந்தை எப்படி ஈசுவர நாமாவைச் சொல்லுகிறது!' என்று ஆச்சரியப்பட்டனர்.



ஸ்ரீ ஸீதாராம ஆஞ்ஜநேயரும் அவரின் மாதா பிதாக்களும்

சிறுவனின் தமக்கைக்கு 7 வயது. இச்சிறு பிராயத்திலும் அவள் ஸம்ஸ்க்ருதத்தில் சம்பாஷணை செய்யும் திறனைப் பெற்றிருந்தாள். தனது தம்பிக்கு ஸம்ஸ்க்ருத பாஷையைக் கற்பிக்க முயன்று வந்தாள். அவர்களுடைய தகப்பனார் இதைக் கண்டு ஆஞ்ஜநேயலுவுக்கு ஸம்ஸ்க்ருத பாஷையை நளின முறையில் படிப்படியாகப் புகட்டினார்.

சிறுவனுக்கு, ஏழாம் ஆண்டில் சம்பிரதாயப்படி உபநயனம் நடந்தேறியது. சிறுவன் படிப்பிலும், விஷயங்களை ஆராய்வதிலும், அபாரமான அக்கரை காட்ட ஓர் {ஒரு விஷயத்தை ஒரே தடவை சொன்ன மாத்திரத்தில், அவ்விஷயத்தை நன்கு அறிந்துகொள்பவன்} ஏக சந்தக் கிராஹியாக விளங்கினான்.

1960ம் ஆண்டில் நமது ஸ்ரீ சிருங்கேரி சங்கராசார்யாள் அவர்கள் (ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகள்) நரசராவ் பேட்டையில் முகாம் செய்திருந்த; போது, ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தை தரிசிக்கும் பொருட்டு, ஸ்ரீவெங்கடேஸ்வ அவதானிகள், தன் குடும்பத்துடன் அங்கு வந்தார், பூஜை சமயத்தில், சிறுவன் சீதாராம ஆஞ்ஜநேயலு, மந்திரங்களை உச்சரித்துக்கொண்டிருந்தான். மிகவும் ஸ்பஷ்டமான (சுத்தமான) உச்சரிப்பு. இது மஹா ஸந்நிதானத்தின் கவனத்தை

ஈர்த்தது. சிறுவனுடன் மஹா ஸந்நிதானம் ஸம்ஸ்க்ருதத்தில் பேச, சிறுவனும் சரியான முறையில் அதே பாஷையில் பதிலளித்தான். ஸ்ரீ மஹா ஸந்நிதானம் மிகுந்த சந்தோஷமடைந்து, சிறுவனை ஆசீர்வதித்தார். அப்போது ஸ்ரீ சீதாராம ஆஞ்ஜனேயலுக்கு வயது 9



அடுத்த ஆண்டு நமது ஜகத்குரு அவர்கள் விஜயவாடாவில் முகாம் செய்திருந்த போது, அந்நகரத்திலுள்ள பிரசித்திபெற்ற ஆயுர்வேத பண்டிதர், கௌத சுப்பிரமணிய சாஸ்திரிகள், ஸ்ரீ சீதாராம ஆஞ்ஜநேயலுவையும், அவனுடைய பெற்றோர்களையும் ஸ்ரீ ஆச்சார்யாளின் தரிசனத்துக்காக கூட்டிச்சென்றார். இம்முறையும் ஸ்ரீ மஹாஸந்நிதானம் சிறுவனுடன் ஸம்ஸ்கிருதத்தில் சம்பாஷித்தார். சிறுவன் வேத மந்திரங்களை, ஸ்வரம் சிறிதும் பிறழாமல் ஸ்பஷ்டமாக உச்சரித்தது கண்டு, ஸ்ரீ மஹாஸந்நிதானம் அவர்கள், உவகை கொண்டு,ஸ்ரீ சீதாராம ஆஞ்ஜநேயலுவுக்கு ஒரு பொன்னாடையை அளித்து, ஆசிர்வதித்தார். பொன் ஆடையை அணிந்துகொண்ட மாத்திரத்தில், சிறுவனுக்கு தன்னுள் ஏதோ ஒரு மாறுதல் ஏற்பட்டதுபோல் தோன்றிற்று. அதுமுதல் சிறுவன் ஸ்ரீ ஜகத்குரு அவர்களின் ஸ்மரணையாகவே இருந்தான். வீட்டிலும் சரி, வெளியிலும் சரி, ஸ்ரீ ஜகத்குருவைப்பற்றித்தான் அவன் பேச்சு. அத்துடன் இல்லாமல், ஊர் மக்களிடையேயும் ஸ்ரீ ஆச்சார்யாளைப்பற்றி புகழ்ந்து பேசலானான். ஸ்ரீ சீதாராம ஆஞ்ஜநேயலுவின் வித்யாப்யாஸம், நரசராவ்பேட்டையில், வித்வான் ஸ்ரீ பிரதாபகிரி சாஸ்திரி அவர்களிடம் நடந்தேறியது.

சிறுவன் தன் தகப்பனாரான ஸ்ரீ அவதானிகளிடம் வேதம் பயின்றார் ஆங்கிலப் பள்ளியில் சேர்ந்து S.S.L.C. வரை படித்தான். நரசராவ்பேட்டையிலிருந்த ஸ்ரீவித்யாரண்ய ஸ்வாமி (பின்னர் சிருங்கேரி சென்று சந்நியாச ஆசிரமத்தை ஸ்வீகரித்துக்கொண்டவர்) ஸ்ரீ சீதாராம ஆஞ்ஜநேயலுவின் மேதையைப் புகழ்ந்து, "அவனுக்கு மகத்தான எதிர்காலம் காத்திருக்கிறது. ஒரு மஹா புருஷனாக விளங்கப்போகிறான், " என்று பேசியிருக்கிறார். சிறுவன் சிருங்கேரிக்குச்சென்று அங்கு சாஸ்திரம்பயிலவேண்டும் என்ற பேரவாக்கொண்டிருந்தான். நாட்கள் செல்லச் செல்ல, இவ்வேட்கை தீவிரமாயிற்று.

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

1967ம் ஆண்டு ஜகத்குரு மஹாஸந்நிதானம் அவர்கள், உஜ்ஜயினியில் முகாம் செய்திருந்தார்கள். அப்போது ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகளுடன் ஸ்ரீ சீதாராம ஆஞ்ஜநேயலுவும் வந்திருந்தான். 16 வயதுகொண்ட இச்சிறுவன் ஸ்ரீமஹா ஸந்நிதானம் அவர்களின் வாயிலாக சாஸ்திரம் பயிலவேண்டுமென்ற அபிலாஷையை, ஸ்ரீ மஹாஸந்நிதானத்திடம் தெரிவித்துக்கொண்டான். அச்சமயத்தில் ஸ்ரீ மஹா ஸந்நிதானம் ஒன்றும் சொல்லவில்லை. மறுநாள் காலை ஸ்ரீ மஹாஸந்நிதானம் அவர்கள், ஸ்ரீ சீதாராம ஆஞ்ஜநேயலுவை தன்முன் வருமாறு கூப்பிட்டு அனுப்பினார்கள் சிறுவன் வந்தான். ஸ்ரீ மஹாஸந்நிதானம் அவனை நோக்கி, "நீ {தர்க்க சாஸ்திரத்தில் சுருக்கமான ஒரு நூல்.} தர்க்க சங்கிரஹத்தை படித்திருக்கிறாயா?' என்று கேட்டார். கூப்பிய கரங்களுடன், சிறுவன் மிகப்பணிவாக, 'இல்லை' என்று பதில் அளித்தான். அன்றுமுதல் ஸ்ரீ மஹாஸந்நிதானம் அவர்கள் ஸ்ரீஸீதாராம ஆஞ்ஜநேயலுவுக்கு தர்க்க சாஸ்திரத்தில் பாடம் சொல்ல ஆரம்பித்தார்கள்.





(ஸ்ரீ சாரதா பீடத்தை அலங்கரித்து வந்திருக்கும் அதிபதிகள் யாவரும், தர்க்கத்திலும், வேதாந்தத்திலும் பூரண பாண்டித்யம் பெற்றவர்கள் என்பதை யாவரும் அறிவர். பிரக்யாதி வாய்ந்த ஸ்ரீசாரதா பீடமாகிய ஸர்வக்ஞ பீடத்துக்கு வருங்காலத்தில், தகுதியுள்ளவராக இருக்கவேண்டும் என்பதற்காகவே, நமது மஹாஸந்நிதானம் அவர்கள் ஸ்ரீ ஸீதாராம ஆஞ்ஜநேயலுவுக்கு தர்க்கசாஸ்திரத்தில் பிரத்யேகப் பயிற்சி அளித்தார்போலும்!]

மூன்று மாதங்களில் தர்க்கஸங்கிரக பாடம் முடிவுற்றது. ஸ்ரீ குருவின் அருளைப் பரிபூரணமாகப் பெற்றுள்ள ஸ்ரீ ஸீதாராம ஆஞ்ஜநேயலு, மேலும் தர்க்கசாஸ்திரத்தின் நுட்பங்களையும் நுணுக்கங்களையும் தெரிந்துகொள்ளப் பேரவாக் கொண்டான் .குரு ஸேவை செய்துகொண்டு ஸ்ரீ மஹாஸந்நிதானம் அவர்களுடைய யாத்திரை முழுதும் நேபாளம், காஷ்மீரம், பதரி உள்பட - அவர்களுடனேயே இருந்துவந்தான். தர்க்கத்திலும் மீமாம்ஸையிலும்

பாடங்களைத் தொடர்ந்து அப்யஸித்தான். ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தின் க்ருபா கடாக்ஷத்தால் பரிபூரண பாண்டித்யம் பெற்றான்.

ஸ்ரீ சங்கர ஜயந்தி விழாவின்போதும், விநாயக சதுர்த்தி விழாவின்போதும் சிருங்கேரி ஸ்ரீ ஜகத்குரு அவர்கள் ஆண்டுக்கு இருமுறை வித்வத்ஸதஸ் கூட்டி வருகிறார். அகில இந்தியாவில் எல்லாப் பிராந்தியங்களினின்றும் கற்றுத்தேர்ந்த பண்டிதர்கள் இந்த ஸம்மேளனங்களுக்கு வருகிறார்கள். அந்த ஸமயங்களில் ஸ்ரீ ஸீதாராம ஆஞ்ஜநேயலு பண்டிதர்களுடன் மிகத் தெளிந்த நடையில் சுத்தமான ஸம்ஸ்க்ருதத்தில் பேசுவார். அவர்கள் இந்தப் படிப்பாளியின் மேதையால் ஈர்க்கப்பட்டு, ஆச்சர்யம் கொள்வார்கள்.

நியாய சாஸ்திரத்தில் விஸ்தார பயிற்சி பெறும் பொருட்டு ஸ்ரீ சீதாராம ஆஞ்ஜநேயலு, அனந்தாவரம் கொல்லப்பூடி கோபாலகிருஷ்ண மூர்த்தி சாஸ்திரி என்ற பண்டிதரிடம் பாடம் கற்க ஸ்ரீ மஹா ஸந்நிதானம் அவர்கள் ஏற்பாடு செய்தார்கள். இந்த ஸ்ரீ கோபாலகிருஷ்ண சாஸ்திரி, வாரணாசி பண்டிதராஜ பத்ம பூஷண, திரவிட ராஜேஸ்வர சாஸ்திரிகளிடம் சாஸ்திரம் பயின்றவர், அடுத்து, ஸ்ரீ சீதாராம ஆஞ்ஜநேயலுவுக்கு ஸ்ரீ மஹா ஸந்நிதானம் அவர்களே,தர்க்க சாஸ்திரம் (உத்தரவாதம்) வேதாந்தம், இவற்றை நேரடியாக பாடம் சொல்லிவைத்து அனுக்கிரஹித்தார்கள். 1974ம் ஆண்டு, நவராத்திரி ஸமயத்தில் ஸர்வ லோகமாதா ஸ்ரீ தேவியிடமிருந்து சிருங்கேரி ஸ்ரீ சாரதாபீடத்திற்கு, அடுத்து ஒரு சிஷ்யரை நியமிக்க முற்படவேண்டுமென்று தெய்வீக ஆக்ஞை பிறந்தது.



விஜயதசமியை அடுத்த மறுநாள் ஏகாதசியன்று காலை 11 மணி இருக்கும். ஸ்ரீ மஹாஸந்நிதானம் அவர்கள் ஸ்ரீ சாரதாதேவியின் ஆலய கர்ப்பக்ருஹத்திலிருந்து வெளிப்போந்தனர். அங்கு கூடியிருந்த எல்லோர் முன்னிலையிலும்," அம்பிகைத் தாயார் ஸ்ரீ சாரதாதேவியார், ஸ்ரீ சாரதா பீடத்தின் பட்டத்தை அடுத்து வகிக்கத் தகுந்த சிஷ்யர் ஒருவரைத் தேர்ந்தெடுக்குமாறு உத்தரவு விடுத்துள்ளாள் நாம் திஷ்யரைத் தேர்ந்தெடுக்க உத்தேசம் கொண்டுள்ளோம் . அந்த சிஷ்யர் ஸ்ரீ ஸீதாராம ஆஞ்ஜநேயலு. ஸ்ரீ சாரதாம்பிகை இதற்கு அனுமதி கொடுத்துவிட்டாள்" என்று அறிவித்தார். 11-11-74 அன்று சிஷ்ய ஸ்வீகாரம் நடைபெறும் என்றும் அவர் சொன்னார்,

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

## சிருங்கேரி ஸ்ரீ ஜகத்குரு மஹாஸந்நிதானம்
## ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களின்
## அனுக்ரஹபாஷணம்

विशुद्धज्ञानदेहाय त्रिवेदीदिव्यचक्षुषे ।
श्रेयःप्राप्तिनिमित्ताय नमः सोपार्धधारिणे ॥

नमामि यामिनीनाथलेखालंकृतकुन्तलाम् ।
भवानीं भवसंतापनिर्वापणसुधानदीम् ।।

எல்லோரும் பேசினார்கள். நாழிகை அதிகம் ஆகிவிட்டது பாதகமில்லை. நம் சிஷ்யர் (புதிய ஸ்வாமிகள்) பேசினார். இவர் கன்னட தேசத்தில் பிறக்கவில்லை. இங்கு வசித்தவருமல்ல. இவர் ஆந்திர பிரதேசத்தில் பண்டித குலத்தில் பிறந்தவர். நம் சிஷ்ய ஸ்வாமிகளுக்கு கன்னடத்தில் பேசமுடியுமோ என்று ஒரு ஸந்தேகம் ரிவின்யூ மந்திரி ஹுச்சே மாஸ்தே கவுடருக்கு இருந்தது. மற்றவர்கள் இதை வெளிப்படையாக சொல்வதற்கு யோசிப்பார்கள். மந்திரி அதை வெளிப்படையாக சொல்லி விட்டார். என் சிஷ்யர் கன்னடத்தில் பேசும் சக்தி உடையவரா என்று எனக்கும் ஸந்தேகம் இருந்தது. தன்னுடைய கன்னட பாஷணத்தில் பாதியில் நிறுத்திவிட்டால் என்ன செய்வது என்று எனக்கு ஸந்தேஹம் வந்தது. ஆனால் இவர் கன்னடத்தில் முழுவதும் பேசியதில், இவர் கன்னட தேசத்திலேயே பிறந்தவராக இருக்கவேண்டும் என்ற எண்ணம்தான் உண்டாகிறது. இந்த கௌரவம் மந்திரி ஹுச்சே மாஸ்தே கவுடரையே சேர்ந்தது. இல்லாவிடில், இப்போது பேசவேண்டாம் பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்றுதான் நான் சொல்லியிருப்பேன்.

தமிழ் நாட்டிலிருந்து ஏராளமான சிஷ்யர்கள் இப்போது வந்திருக்கிறார்கள். "ஸ்வாமிகளுக்கு தமிழ்நாட்டு சிஷ்யர்களிடம் அதிக சலுகை இருக்கிறது ' என்று சிலர் சொல்லுவார்கள். அது சரியல்ல. குழந்தையை எந்தப்பெண்மணி எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறாளோ அவளே தனக்குத்தாய் என்று குழந்தை எண்ணும். அப்போது வேறு யாராவது வந்து 'இது உன் தாயார் அல்ல' என்று சொல்லவேணும். அதுவரை அக்குழந்தை அப்படித்தான் நினைக்கும். அதுபோல் தமிழ்நாட்டு சிஷ்யர்கள் என்னைத் தாங்கும்பொழுது நான் அவர்களுடையவனாக இருக்கிறேன். கர்னாடகத்தார்கள் என்னைத் தாங்கும்பொழுது நான் அவர்களுடையவனாகிறேன். அப்படியே ஆந்திரப் பிரதேசத்தவர்கள்

தாங்கும்பொழுது நான் என்னுடையவனாகவே இருப்பேன். எனக்கு யாரிடமும் பக்ஷபாதம் என்பதே இல்லை. நான் என்னுடையவனாகவே இருக்க விரும்புகிறேன்.

ஒருவருக்கு சிறு வயதில் அத்யயனம் செய்யவேண்டும், வைதிக கர்மாக்களைச் செய்யவேண்டும் என்ற எண்ணம் இருந்தது. இவர் உத்யோகத்தில் இருந்தார், புரோஹிதர் கிடைக்கவில்லை என்று காரணம். சொன்னார். வயதானபின் பார்த்துக்கொள்ளலாம் என்று தீர்மானித்து விட்டார். பூர்வஜன்ம வாஸனாபலத்தால் இந்த எண்ணம் அவர் மனதில் எப்பொழுதும் இருந்தது. ஆனாலும் இவர் ஆசைப்பட்டது நிறைவேறவில்லை. ஆசைப்பட்டால் மட்டும் போதாது .

ஸ்ரீ சோமநாதய்யர் என்னிடம் வந்து சாஸ்திரம் சொல்லித்தர வேணுமென்று கேட்கிறார். " இந்த வயதில் எப்படி அய்யா முடியும்" என்றால், “ஏன்! வேறு எங்கே நான் கற்றுக்கொள்வது? உங்களிடம் தானே !" என்கிறார். அதற்கு நான், " எனக்கு இப்போது சட்டம் சொல்லிக்கொடுக்கிறாயா?" என்றேன். " அதெப்படி இந்த வயதுக்கு மேல்" என்கிறார்."'அப்படியேதான் சாஸ்திரமும் " என்றேன். நமக்கு வேண்டியவன் என்பதற்காக சாஸ்திரம் சொன்னால் வராது. சாஸ்திரத்தில் சந்தேகங்கள் இருந்தால் அவைகளை நிவர்த்தி செய்துகொள்ளலாம்.

நான் முதன்முதலாக வைத்யஸுப்ரமணிய அய்யர் வீட்டுக்குப் போனபோது அவர் என்னைப் பார்த்து, "இதுநான் முதல்தடவை நான் தங்களைத் தர்சிப்பது. எப்படி உங்களுக்கு என்னிடம் இவ்வளவு நம்பிக்கை வந்தது?” என்று கேட்டார்.

व्यतिषजति पदार्थान आन्तरः कोपि हेतुः
नहि खलु बहिरुपाधीन् प्रीतयः संश्रयन्ते ।
विकसति हि पतङ्गस्योदये पुण्डरीकं
द्रवति च हिमरश्मावुद्गते चन्द्रकान्तः ।।

நம் மனதில் ஒரு எண்ணம் தானாகவே தோன்றுகிறது. இதை நாமாகச் செய்துகொள்ளமுடியாது. ஸூர்யன் உதயமானதும் தாமரை மலர்கிறது. ஸூர்யன் உதயமாகும் ஸமயத்தில் எவ்வளவு உஷ்ணம் அதற்கு உண்டோ, அவ்வளவு அளவு உஷ்ணத்தை ஒரு கருவியின் மூலம் உண்டுபண்ணிக்கொண்டு தாமரையின் பக்கம் கொண்டுபோனால் அது மலருமா? மலராது. அதேபோல்

சந்திரனின் கிரணங்களால் சந்திர காந்த மணியிலிருந்து ஜலம் பெருகுகிறது. சந்திரனின் குளிர்ச்சியை அளந்து அந்த அளவுள்ள குளிரை ஒரு கருவியின் மூலம் தயாரித்து மணியின் பக்கத்தில் வைத்தால் ஜலம் மணியிலிருந்து வருமா? வராது. ஆகையால் நம் முயற்சிக்கு அடங்காத, நமக்கு விளங்காத ஓர் காரணம் இருக்கிறது. அதுதான் தாமரையை மலரவும், சந்திரகாந்த மணியை த்ரவிக்கவும் செய்கிறது. வைத்யஸுப்ரமணிய அய்யருக்கு என்னிடம் ஓர் விசேஷ கௌரவம் ஏற்பட்டிருக்கிறது. எனக்கும் அவர் விஷயத்தில் ஓர் விசேஷ ப்ரீதி ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் ஒன்றும் சொல்ல முடியாது. பூர்வஜன்ம ஸம்பந்தம் இருக்கவேண்டும்.



ஸ்ரீ பத்மனாப உபாத்தியாயா என்னிடம் வந்து 'நீங்கள் எல்லாரையும் ஒரேமாதிரி ஸமதிருஷ்டியுடன் பார்க்கிறீர்கள். அதனால் எல்லோருக்கும் உங்களிடத்தில் பிரீதியும் பக்தியுமுள்ளது' என்று சொல்வான். நான் எல்லோரையும் நம்புகிறேன். ஈசுவரன் ஹிரண்யகர்ப்பருக்கு அதிகாரம் கொடுத்து எல்லா காரியங்களையும் கவனிக்கச் சொல்லிவிட்டு தான் சும்மா இருக்கிறார். அதுபோல் உபாத்தியாயாவிடம் எல்லா காரியங்களையும் ஒப்படைத்திருந்தேன். அவன் சுயநலமின்றி மடத்துக்கு கைங்கரியம் செய்தான்.

நான் ஸச்சிதானந்த விலாசத்தில் உட்கார்ந்துகொண்டு சில விஷயங்களைப்பற்றி சில முடிவுகளுக்கு வருவேன். ஸ்ரீ வைத்யசுப்பிரமணிய அய்யர் சென்னையில் இருந்துகொண்டு அதே சமயத்தில் அந்த விஷயத்தைப் பொருத்து அதே முடிவுக்கு வருவார். அடுத்த தடவை சிருங்கேரிக்கு வந்தபோது அதைத்தெரிவிப்பார். இதுபோல் பல தடவைகள் நடந்திருக்கின்றன. இரண்டு பேர்

மனதிலும் ஒரே எண்ணம் தோன்றுகிறது. இது தெய்வ ஸங்கல்பம். பகவானை நாம் சரணாகதி அடைந்துவிட்டால் அவர் எல்லா காரியங்களையும் செய்து கொடுக்கிறார்.

ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति ।
आमयन्सर्वभूतानि यन्त्रारूढानि मायया ।।
तमेव शरणं गच्छ सर्वभावेन भारत ।

என்பது கீதா வாக்யம்.

மந்திரி ஸ்ரீ ஹுச்சேமாஸ்தே கவுடா கிராமத்தியவர். கிராமம் நன்றாக இருந்தால்தான் நாம் ஸுகமாக சாப்பிடமுடியும். அவர்களின் பேச்சில் வித்யாஸமிருக்கும். ஆனால் புத்திசக்தியில் கிராமத்தவர்கள் மேன்மை உள்ளவர்கள். நம் வீரப்ப கவுடா (எம்.எல்.ஏ.) இருக்கிறாரே அவருக்கு அதிகப் படிப்பு இல்லை. ஆனால் அரசியல் விஷயத்தில் இவர் யாரிடம் வேண்டுமானாலும் வாதாடி ஜயிப்பார்.

வைத்யஸுப்ரமணியய்யர் , சோமநாதய்யர் முதலியவர்கள் எல்லாரும் என்னிடம் வந்து, "ஸ்ரீ ஸந்நிதானம் என்ன சொல்கிறீர்களோ அவை நாங்கள் செய்யத் தயாராக இருக்கிறோம் " என்கிறார்கள். ஒரு மனிதனுக்கு மற்றொரு மனிதனிடம் மதிப்பு எப்படி ஏற்படுகிறது?

गुणाः पूजास्थानं गुणिषु न च लिङ्गं न च वयः ॥

நற்குணமுள்ளவரிடம் நமக்குத் தானாகவே மதிப்பு ஏற்பட்டுவிடுகிறது. தமிழ் நாட்டில் இருப்பவர்களுக்கு

काषायदण्डमात्रेण यतिः पूज्यो न संशयः ।

என்றபடி ஸந்நியாசிகள் என்றாலே அவர்களுக்கு பக்தி ஏற்பட்டுவிடுகிறது. நீங்கள் நன்கு விசாரித்துத்தான் மரியாதை செய்யவேண்டும் என்று யாராவது சொன்னாலும் அவர்கள் கேட்கமாட்டார்கள். அவர்களுக்கு சிருங்கேரி

பீடாதிபதிகளிடம் விசேஷ பக்தி உண்டு. அதனால் பல ஸேவைகள் செய்திருக்கிறார்கள்.

வடதேசத்திலிருந்து ஒரு யாத்ரிகர் காலடிக்கு வந்து என்னை தரிசித்தார். அப்போது என்னிடம் ‘எங்கள் பிரதேசத்தில் காலடி என்ற பெயர் பிரமாதமாக சொல்லப்படுகிறது. பகவத்பாதர் அவதாரம் செய்த இடம் இது. ஆனால் நான் இங்கு வந்து பார்க்கும்போது அந்தப் பெயருக்குத் தகுந்த யாதொரு அடையாளமும் இல்லையே' என்றார். அதற்கு அவரை நான் 'என்ன செய்யவேண்டும்' என்று கேட்டேன். அவர் சொன்னார் 'பெயரை அனுசரித்து காரியமும் இருக்கவேண்டும். இங்கு சிறு சிறு குடிசைகள் தான் இருக்கின்றன. இவைகளை எடுத்துவிட்டு நல்ல கட்டிடமாக எழுப்பவேணும்' என்றார். இதை என் மனதிலேயே வைத்திருந்தேன் ஒரு சமயம் வைத்யசுப்ரமணிய அய்யரிடம் 'நான் கொஞ்சம் பணம் வைத்திருக்கிறேன். இந்த காரியத்தை முடிக்கவேண்டும்' என்று சொன்னேன்.அதற்கு அவர் ‘உங்களுடைய பணம் எதற்காகத் தேவை' என்று சொல்லிவிட்டு பக்தர்களின் உதவியுடன் ஏராளமாக செலவு செய்து பெரிய கட்டிடத்தை அங்கு அமைத்துவிட்டார். நான் என் மனதில் எப்படி எப்படி கட்டவேண்டும் என்று எண்ணினேனோ அப்படியே அவர் கட்டி விட்டார். இத்துடன் அவருக்கு திருப்தி வரவில்லை. முன்மண்டபமும் தன் சொந்த செலவில் கட்டிவிட்டார்.

कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन ।
मा कर्मफलहेतुर्भूः मा ते संगोऽस्तु अकर्मणि ॥

என்ற ரீதியில் அவர் காரியம் செய்வார்

ஸ்ரீ சாரதாம்பாளுக்கு தங்கத்தில் ஸஹஸ்ரநாம காசுமாலை செய்ய வேணும் என்று அவர் ஆரம்பித்தார். அதற்காக மடத்திலும் ஓர் பாகம் ஸ்வர்ணம் கொடுக்கவேண்டும் என்று எண்ணி இங்கு இருந்த ஒரு தங்க பஞ்சபாத்திரத்தைக் கொடுத்தேன் அதன் எடை 27 பவுன் இருந்தது காசுமாலை செய்து முடித்த பின்பு கொஞ்சம் தங்கம் மீதமிருந்ததாம். அதன் எடை 27 பவுன் இருந்தது. "ஸ்ரீ சாரதாம்பாளின் தங்கத்தை நாம் கேட்டு வாங்கிக் கொண்டிருக்கக் கூடாது " என்று அவர் சொல்லி விட்டு அந்த எடைக்கு தங்கத்தில் கமண்டலுவாகப் பண்ணி அதை இங்கு ஸமர்பித்து இருக்கிறார். சோமநாதய்யர் சொல்லுவார் "ஸ்ரீ மடம் காரியங்களை கவனித்தால் நம் மனதில் கவலைகளே தோன்றுவதில்லை "

என்று. எல்லோரும் இந்த ஸ்ரீ மடம் கைங்கர்யத்தை ஏற்றுக்கொண்டு செயல் படலாம்.

நானும் ஆந்திர தேசத்தவன்தான் - நந்தியாலுக்கு பக்கத்தில் உள்ள கைபு என்ற ஊரைச்சேர்ந்தவர்கள் எங்கள் முன்னோர்கள். அவர்கள் பிழைப்புக்காக பெங்களூர் வந்தார்கள். நாங்கள் கன்னடக்காரராகி விட்டோம். வீட்டில் நாங்கள் பேசுவது தெலுங்குதான். ஆனால் அது ஆந்திரர்களின் பாஷைபோல் அவ்வளவு சுத்தமாக இருக்காது இருந்த போதிலும் ஆந்திர தேசத்தவர்கள் என்னை "மாவாள்ளு (நம்முடையவர்)" என்று சொல்வார்கள். ஆனால்,



अयं निजः परो वेति गणना लघुचेतसाम् ।
उदारचरितानां तु वसुधैव कुटुम्बकम् ।।



என்ற படி எங்களுக்கு எவ்வித வித்யாஸமும் இல்லாமல் கார்யம் செய்கிறோம். ஒரு ஸந்ய:ஸிக்கு,

त्यक्तव्यो ममकारः त्यक्तुं यदि शक्यते नासौ ।
कर्तव्यो ममकारः किं तु स सर्वत्र कर्तव्यः ।।

என்றபடி ஒரு பற்றுதலும் இருக்கக்கூடாது.

ஒருவர் இந்தப் பீடத்துக்குப் பீடாதிபதியாக வந்தபின் அவர் எல்லா பாஷைகளுக்கும், தேசங்களுக்கும் மீறினவராகிறார், எல்லா சிஷ்யர்களும் அவருக்கு ஸமமானவரே.

இந்தப் பாடசாலை சுமார் 80 வருஷங்களுக்குமுன்பு ஏற்படுத்தப் பட்டது. இதில் அத்யக்ஷராக இருந்த குலபதி ஸ்ரீ சங்கரநாராயண ஜோஸியர் இந்த வஜ்ரமஹோத்ஸவத்தை நடத்தவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டு அதை


பத்மநாப உபாத்யாயாவிடம் தெரிவித்தார். “அப்படியே செய்யவேண்டியதுதான்” ? என்று உபாத்யாயா சொன்னார். ஆனால் "ஸ்ரீ ஸந்நிதானத்திடம் கேட்போமே” என்று குலபதி சொல்ல அதற்கு உபாத்யாயா, “அவரைக் கேட்கவேண்டியதில்லை. நல்ல காரியம்தானே ! நாமே செய்யவேண்டியது தானே ! அவரைக் கேட்டால் வேண்டாம் என்றால் நாம் செய்ய முடியாது ' என்றான். வைத்யசுகப்ரமணிய அய்யரும் உபாத்தியாயாவும் ஒரே மாதிரி எண்ணம் உள்ளவர்கள். நான் உபாத்தியாயாவிடம் 'இதற்கு பணத்துக்கு என்ன செய்வதப்பா” என்றேன். அதற்கு அவன் “உங்களை பணம் கேட்பதில்லை. காரியத்தை நடத்திவிட்டுகிறோம்' என்றான் அவன் எல்லா ஏற்பாடுகளும் செய்து முடித்து விட்டான். அவன் செய்த ஸத்ய ஸங்கல்பம் நிறைவேறிவிட்டது. உபாத்யாயா போட்ட திட்டத்துக்குமேல் செலவாகி இருக்கிறது.

न हि ज्ञानेन सदृशं पवित्रमिह विद्यते ।

என்றபடி ஸத்யமான ஞானமே உயர்ந்தது. எவனுக்கு இப்படி உத்தமமான எண்ணங்கள் வருகின்றனவோ அவன் பூஜ்யன். எல்லாம் கற்கள் தான். புஷ்பராகமும் ஒரு கல்தான். அதைக் கொண்டுவந்து சாணை கொடுத்தால் சில பாகங்கள் தேய்ந்துபோய் பளபளப்பு அதிகமாகிவிடுகிறது. விலைமதிப்புள்ளதாகிவிடுகிறது. அதுபோல் நல்ல ஸம்ஸ்காரம் இருந்தால் மனதில் பக்குவம் உண்டாகிறது, அவன் பூஜ்யனாகிறான்.

சாப்பிட உட்கார்ந்திருக்கையில் படித்தவன், படிக்காதவன் எல்லோரும் சமமானவர்கள் தான். அதில் ஒருவன் ஸர்வக்ஞன். கவியாக இருப்பான். இது ஜன்மாந்தர ஸம்ஸ்காரத்தினால் உண்டாகிறது. முன் ஜன்மாவில் நல்ல படிப்பு இருந்திருந்தால் இப்போது தானாகவே அது தோன்றும்.

ஞானம் என்பது இருவகைப்படும். லௌகிகம், வைதிகம் என்று. லௌகிக ஞானம் வாழ்க்கையில் ஜீவனத்துக்காக உபயோகமாகும். வைதிக ஞானம் ஆத்மஞானத்துக்கு ஸாதனமாகும். இங்கு நசிகேதோபாக் ஞானத்தை ஞாபகப்படுத்திக்கொள்ளவேணும். மனிதன் பிறந்தது வீண் வாழ்க்கைக்கு அல்ல. உலகில் இருக்கும்போது நிஷ்காம கர்மாவைச் செய்து ஞானம் அடைந்து சரீரம் விழும் காலத்தில் பிரும்ம சாயுஜ்ய மோக்ஷம்பெற வேண்டும் என்பதே மனிதனின் லக்ஷ்யமாக இருக்கவேண்டும். உங்களுக்கு எல்லா மங்களங்களும் உண்டாகும் படி ஸ்ரீசாரதா சந்திமௌளீசுவரரைப் பிரார்த்திக்கிறேன்.


## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## சிருங்கேரி ஶ்ரீ ஸந்நிதானம் ஶ்ரீ பாரதீ தீர்த்த ஸ்வாமிகளின் பிரதமபாஷணம்

आस्ते देशिकचरणं निरवधिरास्ते तदीक्षणे करुणा ।
आस्ते किमपि तदुक्तं किमतः परमस्ति जन्मसाफल्यम् ।।

कारुण्यसारसान्द्राः कांक्षितवरदानकला कविशेषाः ।
सद्गुरुचरणकटाक्षाः शिशिराः शमयन्ति चित्तसन्तापम् ।।



ஒவ்வொரு மனிதனும் ஸுகத்தையே விரும்புகிறான். ஆனால் ஸுகத்துக்கு எது ஸாதனம் என்று தெரியாமல் கஷ்டப்படுகிறான். ஸுகத்துக்கு ஸாதனம் ஞானம் ஒன்றுதான், இதுதான் உபநிஷத்துக்களின் ஸித்தாந்தம். ஒரு சிறிய வித்யார்த்தி தனக்கு ஏற்படும் ஸந்தேஹத்தைத் தீர்த்துக்கொள்ள தன் குருநாதரிடம் போய் கேட்கிறான். அந்த ஸந்தேஹம் தீர்க்கப்பட்டவுடன் அவனுக்கு எல்லையற்ற ஆனந்தம் ஏற்படுகிறது. அவனுக்கு நிறைய லட்டுக்களைக் கொடுத்து அவைகளை அவன் சாப்பிட்டுக் கிடைக்கும் ஆனந்தமும் இந்த ஆனந்தத்திற்கு ஈடாகாது. ஆகவே, ஸுகம் என்பது ஞானத்தினால்தான் உண்டாகும் என்பது தீர்மானம். ஒரு யாசகன் சொன்னான்:

अहं च त्वं च राजेन्द्र लोकनाथावुभावपि ।
चहुव्रीहिरहं राजन् षष्ठीतत्पुरुषो भवान् ।।

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

"நான் ஏழை. நீங்கள் பிரபு. ஆனாலும் நான் பிரபுவாக இருக்க வில்லையே என்று எனக்கு துக்கம் இல்லை. ஏனென்றால், நானும் லோகநாதன். நீங்களும் லோகநாதர், ஆகையால் எனக்கு த்ருப்தி ஞானம் ஏற்பட்டுவிட்டது. நான் எப்படி லோகநாதன் என்றால் லோக: நாத: யஸ்ய ஸ: (பஹூவ்ரீஹி ஸமாஸம். லோகத்தை நாதனாக உடையவன் ) உலகம் முழுவதையும் எனக்கு நாதகை நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். உங்கள் பக்ஷத்தில் அதை ஷஷ்டீதத்புருஷனாக வைத்துக்கொண்டால், லோகஸ்ய நாத: லோகத்திற்கு நீங்கள் நாதன் என்று பொருள். ஆகையால் நாமிருவரும் லோகநாதர்களே, அதனால் எனக்கு ஒருவிதமான கவலையுமில்லை.


இதனால் தெரிவது என்னவென்றால், ஞானம்தான் ஸுகஸாதனம். உபநிஷத்துக்களும், "ஞானாதேவ கைவல்யம்" என்று சுட்டிக்காட்டுகின்றன. ஸ்ரீ சங்கரபகவத்பாதர்கூட அப்படித்தான் பிரசாரம்செய்தார்கள், அவர் ஏதோ புதிதாக வேதாத்தத்தை சிருஷ்டித்தார் என்று எண்ணிக் கொள்ளக்கூடாது. முன்னமேயே சொல்லப்பட்டிருந்த உண்மையைத்தான் பிரகடனம் செய்தாரேதவிர, வேறு ஏதுமில்லை. அவருக்குமுன் அநேக காலமாக இருந்துவந்த ஸநாதன தர்ம தத்துவத்தை அக்காலத்திலிருந்த மனிதர்கள் சரியாகப் புரிந்துகொள்ளாமலிருந்த காரணத்தால் ஸ்ரீ சங்கர பகவத்பாதர் அந்த வேதாந்தத்தை நன்றாக விளக்கினார். அவ்வளவுதான். அதே உபநிஷத்துக்களில் காண்பிக்கப்பட்ட ஸத்பத்தை உலகுக்கு எடுத்துச்சொன்னார். அவ்வண்ணமே பின்னிட்டு வரும் ஆசார்யர்கள் அதே அக்கரையுடனும் தெளிவுடனும் தீர்மானத்துடனும் மக்களுக்குத் தெரியப்படுத்துவார்களோ மாட்டார்களோ என்று கவலைகொண்டு அந்த ஸத்யத்தைத் தான் சொன்னபடியே பிரசாரம் செய்யவேண்டி, அவர் இந்தப் பாரத தேசத்தில் நான்கு ஆம்நாய பீடங்களை ஸ்தாபித்தார்.

அவைகளில் இந்த சிருங்கேரியில் உத்தமமான ஸ்ரீ சாரதா பீடத்தை ஸ்தாபித்தார். இந்த பீடத்துக்கு முதல் முதலாக ஸ்ரீ சுரேசுவராசாரியாரை பீடாதிபதியாக நியமனம் செய்தார். ஸ்ரீ சுரேசுவராசாரியார் எப்பேர்பட்ட மகா வித்வத் ஸம்பத்து உடையவர் என்றால் பூர்வமீமாம்ஸையில் உத்தம் பண்டிதராயிருந்ததுடன் பாரததேசம் முழுவதிலும் ஸ்ரீ சங்கரபகவத்பாதரின் எதிரில் நின்று வாதம் செய்யும் ஸாமர்த்தியம் யாருக்கும் இல்லாத காலத்தில், ஸ்ரீசுரேசுவராரியார் ஏழு நாட்களாக ஸ்ரீபகவத்பாதருக்கெதிரில் தொடர்ந்து வாதம் செய்தார். இகிலிருந்தே ஸ்ரீசுரேசுவராசாரியாரின் வித்வத்தின் மஹிமை எப்பேர்ப்பட்டதாயிருக்கவேண்டும் என்று நாம் ஊகித்துக்கொள்ளலாம். அப்பேற்பட்ட பிரசித்திபெற்ற ஸ்ரீ சுரேசுவராசாரியாரை சிருங்கேரியில் முதன்முதலாக பீடாதிபதியாக நியமித்தார். நமது வித்வான் பெங்களூர் ஸ்ரீராமச்சந்திர சாஸ்திரிகள் சொன்னதுபோல் அதே சுரேசுவராச்சாரியார்

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

'நைஷ்கர்ம்யசித்தி', 'பிருஹதாரண்ய வார்த்திகம்' முதலிய க்ரந்தங்களை எழுதி அத்துவைத வேதாந்தத்துக்கே மூலஸ்தம்பராக இருந்தார். இந்தக்காலத்தில் வேதாந்த கிரந்தங்கள் எது எது உள்ளதோ அவையெல்லாம் ஸ்ரீ சிருங்கேரி பீடாதிபதிகளிடமிருந்துதான் வெளிப்பட்டது என்று சொன்னால் அது ஸத்தியமான வாக்கு. அந்த சுரேசுவராசாரியாரது 'நைஷ்கர்ம்யசித்தி' பல கிரந்தங்களில் பிரகாசப் படுத்தப்பட்டிருக்கின்றது.



அந்த பரம்பரையை அலங்கரித்த நமது பரமேஷ்டி குருவான ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரசிம்மபாரதீ ஸ்வாமிகளோ மஹாநையாயிகராகவும், மஹாவேதாந்த வித்யுத்பன்னராகவும் இருந்தார். மேலும் அவருடைய திவ்யஸ்வரூபமே- அதிகம்பீரமான பிரதிரூபமே - நமது மஹா ஸந்நிதானம் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயமேயாகும். ஆகையால் நமது ஸ்ரீ ஜகத்குருவே நமது பரமேஷ்டி குருநாதராக இருந்தார். அவருடைய காலத்தில் வேதங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் ஏற்பட்டிருந்த நெருக்கடியைக் கண்டு வேதனையடைந்து அநேக வேதபாடசாலைகளையும் சாஸ்திர பாடசாலைகளையும் ஸ்தாபித்தார். அவைகளில் சிருங்கேரியில் ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஸத்வித்யா ஸஞ்ஜீவினீ பாடசாலை முக்கியமானது. இந்த பாடசாலையில் பலர் படித்து வித்வான்களாகி இருக்கிறார்கள் இந்த பாடசாலைக்கு இப்போது 80 ஆண்டுகள் ஆயிற்று. ஆகையால் இதற்கு இந்த வஜ்ர மஹோத்ஸவத்தை செய்யவேண்டிய ஸந்தர்ப்பம் அமைந்து உள்ளது.

இந்த வஜ்ரமஹோத்ஸவ வைபவத்திற்கு மூலகாரணமானவரும், எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்தவருமான வித்வான் பத்மநாப உபாத்யாயா அவர்கள் இப்போது இருந்திருந்தால் நம் எல்லோருக்கும் எவ்வளவு ஸந்தோஷமாக இருக்கும் என்பதை வார்த்தைகளால் சொல்ல இயலாது; ஆனால் அந்த நிலைமை இப்போது இல்லை. விதி வேறுவிதமாக ஸங்கல்பித்திருக்கும்போது நாம் என்ன செய்யமுடியும்? அவர் நம் ஜகத்குருவிடம் நன்றாக நெருங்கியிருந்து குருநாதருடைய பூர்ண அனுக்ரஹத்தைப் பெற்றிருந்ததனால் அவர் ஸத்யஸங்கல்பராகியிருந்தார் என்றே சொல்லவேண்டும். ஏனெனில், அவர் ஸங்கல்பித்தபடியே இன்றைய வைபவம் மகிழ்ச்சிகரமாகவும் நிர்விக்னமாகவும் நடந்ததென்றால், அவர்

உண்மையான ஸத்யஸங்கல்பரே என்பது தீர்மானம். அப்பேர்ப்பட்ட இந்தப் பாடசாலையின் வஜ்ரமஹோத்ஸவத்தில் நீங்களெல்லோரும் கூடி இந்த வைபவத்தை சிறப்பாக நடத்தியிருக்கிறீர்கள். இதில் எங்களுக்குப் பரமானந்தம்.

நான் இந்த ஸந்தர்ப்பத்தில் சில வார்த்தைகளைப் பேச ஸம்பவித்ததற்குக் காரணம் நமது மந்திரி ஹுச்சே மாஸ்தே கவுடரே. அவர் பேசுகையில் இதைத் தெரிவித்தார். அதற்குமுன்னமேயே இந்த விஷயத்தைப்பற்றி நமது ஸ்ரீ குருநாதரிடம் ஸ்ரீ சோமநாத அய்யர் "ஸன்னிதானம் சில வார்த்தைகள் பேசவேண்டும்' என்று பிரார்த்தித்தார். அதை மஹாஸந்நிதானம் அங்கீகரித்து அனுக்கிரகித்தார்கள். ஸ்ரீ ஹுச்சே மாஸ்தே கவுடரின் தார்மிக ஸ்வபாவம் என்னுடைய மனதிற்கு மிகவும் பிடித்தது. அவருடைய பேச்சில் 'என்னுடைய மனம் எப்போதும் ஸ்ரீகுருநாதருடைய அனுக்கிரகத்தைப் பெறவேண்டுமென்பதிலேயே நிலைத்து நிற்கின்றதே தவிர வேறொன்றும் இல்லை' என்று தெரிவித்தார். இத்தகைய தார்மிகர் மந்திரியாக இருந்தால் அவருடைய சர்க்கார் எப்படி அதார்மிகமாக இருக்கமுடியும்?

நமது சாஸ்திரங்களில் சுட்டிக்காண்பிப்பதும் நிர்ணயித்திருப்பதும் அத்வைதமே. நமக்கு பிரதிபக்ஷமே நையாயிகர்களும், மற்றும் வேறு மதக்கொள்கைகளை உபநிஷத்தில் கண்ட வேதாந்தத்தை கண்டித்து பேசும்போது அத்வைதத்தில் சொல்லியிருப்பதையே வைத்துக்கொண்டு வாதம் செய்கிறார்களே தவிர வேறு தத்துவங்கள் எதையும் எடுத்து பேசுவதில்லை. ஆகையால் நமது புத்தரங்களில் அத்வைத மதத்தை தனியாக சுட்டிக்காண்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. நமது பிரதிபக்ஷ கிரந்தங்களில் சொல்லப்பட்ட முரண் பட்ட வாதங்கள் யாது என்று பரிசீலிக்கும்போது நம்முடைய உபநிஷத் மதம் தெளிவாகிவிடும்.

தார்மிகரான ஹுச்சேமாஸ்தே கவுடர் தார்மிகமான மனோபாவம் உடையவர் அப்படிப்பட்ட மனோபாவத்தை வைத்துக்கொண்டு அவர் தனக்குமட்டுமல்லாமல் அரசியலில் இருக்கும் அனைவருக்கும் இதேவிதமான மனோபாவம் இருக்கவேண்டுமென்று ஆவல் கொண்டவராக இருக்கிறார். அவருடைய அபிப்பிராயமே இந்த விமரிசனத்துக்கு காரணமாய் இருந்தது.

இங்கே கூடியிருப்பவர்களுக்கு மற்றொரு விஷயத்தை விளக்க விரும்புகிறேன். ஆந்திரப் பிரதேச பிரதமர் ஸ்ரீ வெங்கல் ராவ், ரிவின்யூ மந்திரி ஸ்ரீ சூர்யநாராயண ராவ் இங்கு வந்திருக்கிறார்கள் இவர்கள் தார்மிகர்களாகவும்

நமக்கு ஹிதமாகவும் உள்ளவர்கள். இப்படிப்பட்டவர்கள் அரசியலில் இருப்பது எங்கள் மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சியையுண்டுபண்ணக் கூடிய விஷயமாகும். இவர்கள் நாளை நடக்கவிருக்கும் நமது ஜகத்குருவின் வர்தந்தி மஹோத்ஸவத்திற்கு வந்து சேருவதாக தெரியப்படுத்தியிருந்தார்கள் ஆனால் இந்த விழாவின் ஆரம்பத்திலேயே இவர்களும் கலந்து கொள்ளும் பாக்யம் ஏற்பட்டது. இது மிகுந்த ஆனந்தமாகும். இதற்கு பிறகு ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தின் அனுக்கிரஹ பாஷணம் தொடங்கப் போகிறது. அதனால் நாம் அதிக நேரம் எடுத்துக்கொள்வது சரியல்ல. நீங்கள் அனைவரும் ஸ்ரீ சாரதா சந்திரமௌளீஸ்வரர் அனுக்ரஹத்தால் சகல சிரேயஸ்ஸையும் அடையவேண்டுமென்று பிரார்த்தனை செய்துகொண்டு இந்த பாஷணத்தை முடிக்கிறேன்.

12-11-74 அன்று இரவு ஷெ பாடசாலை வித்யார்த்திகளால் ஸம்ஸ்க்ருதத்தில் "பிரஹ்லாத சரித்ர நாடகம்" நடிக்கப்பட்டது. இத்துடன் ஸத்வித்யா ஸஞ்ஜீவினீ பாடசாலையின் வஜ்ரமஹோத்ஸவம் பூர்த்தியடைந்தது.



Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்